**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 77** **நாள் : 11.04.2025**

**மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள்**

**மணலி மற்றும் மாதவரம் மண்டலங்களுக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப்பணிகளை இன்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மணலி மற்றும் மாதவரம் மண்டலங்களுக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் மணலி ஏரி, மாதவரம் ஏரி மற்றும் கடப்பாக்கம் ஏரி புனரமைப்புப் பணிகள், புதிதாக கட்டப்பட்டு வரும் சமூக நலக் கூடப் பணி மற்றும் மயானபூமி மேம்பாடு உள்ளிட்ட வளர்ச்சித் திட்டப்பணிகள் குறித் , மஞ்சம்பாக்கம் நகர்ப்புர சமுதாய நல மையம் மற்றும் அம்பேத்கர் தெரு குழந்தைகள் மையத்தின் செயல்பாடுகள், பாடசாலை தெரு சென்னை பள்ளியில் மேற்கொள்ளப்படும் மாணவர்கள் சேர்க்கை குறித்தும் மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள் இன்று (11.04.2025) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மாண்புமிகு மேயர் அவர்கள் அம்ருத் 2.0 திட்ட நிதியில் மணலி மண்டலம், வார்டு-20ல் ரூ.4.73 கோடி மதிப்பில் 29 ஏக்கர் பரப்பளவிலும், மாதவரம் மண்டலம், வார்டு-27க்குட்பட்ட மாதவரம் ஏரியில் ரூ.4.56 கோடி மதிப்பில் 66 ஏக்கர் பரப்பளவிலும் மேற்கொள்ளப்பட்டு வரும் புனரமைப்புப் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

மணலி ஏரியில் மழைக்காலத்தில் ஏரியின் உபரிநீர் வெளியேறி பாதிப்பு ஏற்படுவதைத் தவிர்க்கும் வகையில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

மாதவரம் ஏரி மேம்பாட்டுப் பணியில் காமராஜர் சாலை முதல் மீன்பிடி பல்கலைக்கழக சாலை வரை 66 ஏக்கர் பரப்பளவில் தூர்வாருதல், சங்கிலி இணைப்பு வேலி அமைத்தல், முகப்பு அலங்கார பணி, தேவையற்ற செடி, கொடிகளை அகற்றி சுத்தம் செய்து, பசுமை தாவரங்களை நடுதல், சிறுவர்கள் விளையாட்டு உபகரணம், நடைபாதை, காவலர் அறை, இருக்கைகள், மின்வசதி மற்றும் குடிநீர் வசதி உள்ளிட்ட வசதிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், ஏரியுடன் 5 மழைநீர் வடிகால்களும் இணைக்கப்படவுள்ளது. இதனால் பெரிய சேக்காடு, பேங்க் காலனி, கே. கே. தாழை, மாதவரம் மில்க் காலனி, உள்ளிட்ட 165 தெருக்களைச் சார்ந்த மக்கள் பயனடைவார்கள்.

பின்னர், மணலி மண்டலம், வார்டு-21க்குட்பட்ட பாடசாலை தெரு அரசு உயர்நிலைப்பள்ளியில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ், 6,209 சதுர அடி பரப்பளவில் ரூ.2.10 கோடி மதிப்பில் கட்டப்பட்டு வரும் நவீன நூலகம் மற்றும் அறிவுசார் மையக் கட்டடம் அமைக்கும் பணியினைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பணியினை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

